* முதலமைச்சர் மற்றும் பிற அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பது-ஆளுநர்

**முதலமைச்சரின் பணிகள் சில :**





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

* அமைச்சர்களை தேர்வு செய்தல்
* அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்தல்
* ஆளும் கட்சியின் தலைவர்
* நிர்வாகத் திறனற்ற அமைச்சர்களை நீக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்தல்
* தேசிய வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர் (NDC)
* மாநிலத் திட்டக்குழுவின் தலைவர்

**தமிழகத்தின் முதல் முதல்வர் - A. சுப்புராயலு ரெட்டியார் 1920.**
**சுதந்திரத்தின் போது - ஓமந்தூரார் ராமசாமி ரெட்டி.**
**காங்கிரஸ் சார்பில் முதல் முதல்வர் - ராஜாஜி.**
**தி.மு.க. சார்பில் முதல் முதல்வர் - அறிஞர் அண்ணா.**
**அ.தி.மு.க சார்பில் முதல் முதல்வர் - எம்.ஜி.ஆர்.**

## பிற தகவல்கள்

**அவசர நிலைப்பிரகடனம்**

**Art 352 தேசிய நெருக்கடி நிலை**

**அறிவிக்கப்படும் சூழ்நிலை**

* போர்,
* வெளிநாட்டவர் ஆக்கிரமிப்பு,
* உள்நாட்டு கலவரம்,
* அபாயகரமான நிலை
* கால அளவு-6மாதங்கள். மேலும் 6 மாதம் நீட்டிக்கலாம், அதிகபட்ச கால அளவு இல்லை
* தேசிய நெருக்கடிக்குப்பின்பு பாராளுமன்றம் கூடிய 30 நாட்களுக்குள் அங்கீகாரம் பெற வேண்டும்.

**Art 352 பயன்படுத்தப்பட்ட ஆண்டுகள்**

* 1962 இந்திய சீனப்போர்
* 1971 இந்திய பாகிஸ்தான் போர்
* 1975 உள்நாட்டுக் கலவரம்

**Art 352 மாநில நெருக்கடி நிலை**

* மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டபின் 60 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.
* Art 356 அமலில் இருக்கும்போது அந்த மாநிலத்தின் பட்ஜெட் மத்திய நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.
* Art 356 பயன்படுத்தப்பட்ட ஆண்டு





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

* முதலில் பஞ்சாப் 20.06.1951
* 1956 கேரளா
* தமிழ்நாடு 4 முறை
* அதிகமுறை பஞ்சாப்

**Art 360 நிதி நெருக்கடி**

* இதுவரை அமல்படுத்தப்படவில்லை.

## பாராளுமன்ற கூட்டத் தொடர்கள்

1. பட்ஜெட் கூட்டத்தொடர் - பிப்ரவரி - மே (நீண்ட கால கூட்டத்தொடர்)
2. மழைக்கால கூட்டத்தொடர் - ஜுலை - ஆகஸ்ட்
3. குளிர்கால கூட்டத்தொடர் - நவம்பர் - டிசம்பர்

**சிறப்புக் கூட்டங்கள் குடியரசுத் தலைவரால் கூட்டப்படும்**

* சிறப்புக் கூட்டங்கள் கூட்ட சபாநாயகர் மற்றும் ராஜ்யசபா தலைவரிடம் 14 நாட்களுக்கு முன்பு தெரியப்படுத்த வேண்டும்.
* 1/10 பங்கு உறுப்பினர்கள் இருந்தால்தான் (Quorum) சபை நடவடிக்கைகள் தொடங்க வேண்டும்.

**தீர்மானங்கள்**

**கவன ஈர்ப்புத் தீர்மானம் (Consure Motion)**

* எதிர்க்கட்சிகளால் மக்களவையில் கொண்டுவரப்படும்.
* ஆளும் கட்சியின் கொள்கைகள், செயல்பாடுகளில் அதிருப்தி ஏற்படும் போது கொண்டுவரப்படும் தீர்மானம்.

**நம்பிக்கை இல்லாத்தீர்மானம் (No Confidance Motion)**

* எதிர்க் கட்சிகளால் மக்களவையில் மட்டுமே கொண்டுவரப்படும் தீர்மானம்
* இத்தீர்மானம் வெற்றிபெற்றல் அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டும்.
* முதன்முதலாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட ஆண்டு 1963 (நேருவுக்கு எதிராக)

**நம்பிக்கை கோரும் தீர்மானம் (Confidence Motion)**

* ஆளும் அரசால் கொண்டுவரப்படுவது
* 1979ல் சரண்சிங் அரசு நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டு வந்தது.

**ஒத்திவைப்புத் தீர்மானம் (Adjournment Motion)**

* அவசரமான பொதுப்பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க கொண்டுவரப்படும் தீர்மானம்.
* இந்த தீர்மானத்தை கொண்டு வர குறைந்தது 50 உறுப்பினர்கள் கோர வேண்டும். விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடைபெறும்.

**கேள்வி நேரம்**

* பாராளுமன்றம் கேள்வி நேரத்துடன் துவங்கும்.
  முதல் ஒரு மணிநேரம் கேள்வி நேரம் 11am to 12Pm





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

* 10 நாட்களுக்கு முன்பே நோட்டிஸ் கொடுத்து கேள்வி கேட்க வேண்டும்.

**குறியிட்ட கேள்விகள்**

* இக்கேள்விக்கு பதில் வாய்மொழியாக தரப்படும், பதிலில் திருப்தி இல்லையெனில் துணைக் கோள்விகள் கேட்கலாம்.

**குறியிடப்படாத கேள்விகள்**

* எழுத்து மூலம் மட்டுமே பதில் தர முடியும்
* துணைக் கேள்விகள் கேட்க இயலாது

**குறுகிய கேள்விகள்**

* பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகள்
* திங்கள், புதன், வெள்ளி நாட்களில் நடைபெறும்
* இக்கேள்விகள் மீது விவாதம் நடைபெறும்

**பூஜ்ய நேரம் (Zero Hour)**

* 1962ல் இது அறிமுகப்படுத்தப்பட்டது
* 12PM to 1PM வரை உள்ள நேரம்

**சில முக்கிய குழுக்கள்**

**பொது கணக்கு குழு**

* உறுப்பினர்கள் மொத்தம் 22

| | |
|---|---|
| லோக் சபா | 15 |
| ராஜ்யசபா | 7 |
| **மொத்தம்** | **22** |

* தலைவர் - எதிர்க்கட்சி உறுப்பினர்
* பதவிக்காலம் - 1 ஆண்டு நியமனம், குடியரசுத் தலைவர்
* இந்தியாவின் காவல் நாய் எனப்படும்.
* அரசின் பொதுக்கணக்கு மற்றும் இந்திய தலைமை தணிக்கையாளர் கணக்கை ஆய்வு செய்யும் தேவைப்பட்டால் எந்த ஒரு அமைச்சர் மீதும் விசாரணை நடத்தும்.

**மறு மதிப்பீட்டுக்குழு**

* மொத்த உறுப்பினர்கள் - 30
* 1950ல் அமைக்கப்பட்டது
* தலைவர் சபாநாயகரால் நியமனம் செய்யப்படுவார்.
* பதவிக்காலம் 1 ஆண்டு
* அனைத்துகட்சி உறுப்பினர்களுக்கும், சம பிரதிநிதித்துவம்
* அமைச்சர்களுக்கு இடமில்லை

**பொதுத்துறை நிறுவனங்கள் மீதான குழு**

* மொத்த உறுப்பினர்கள் மொத்தம் 22

| | |
|---|---|
| லோக் சபா | 15 |





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

ராஜ்யசபா 7

**மொத்தம் 22**

* 1964ல் அமைக்கப்பட்டது
* தலைவர் சபாநாயகரால் நியமனம்
* அமைச்சர்களுக்கு இடமில்லை
* பொதுத்துறை நிறுவனங்களின் மீதான கணக்குகளை ஆய்வு செய்யும்

**SC, ST நல்வாழ்வுக்குழு**

* மொத்த உறுப்பினர்கள் - 30

  லோக்சபா 20

  ராஜ்யசபா 10
* அமைச்சர்கள் உறுப்பினராக முடியாது
* SC, ST மக்களுக்கான திட்டங்களை ஆய்வு செய்தல்
* SC, ST ஆணையத்தின் அறிக்கையை ஆய்வு செய்தல்

**பிராந்திய குழுக்கள்**

* 1956 முதல் செயல்படுத்துகிறது.
* மொத்தம் 6 குழுக்கள் 1.கிழக்கு, 2.மேற்கு, 3.வடக்கு, 4.தெற்கு, 5.மத்திய கிழக்கு, 6. வடகிழக்கு
* **உறுப்பினர்கள்** மாநில முதல்வர்கள் மற்றும் அந்தந்த மாநிலத்தின் இரண்டு அமைச்சர்கள்
* **தலைவர்** மத்திய உள்துறை அமைச்சர்
* **பணி** பிராந்திய ரீதியாக எழும் சமூக பிரச்சனைகள் எல்லைத்தகராறுகள், போக்குவரத்து பிரச்சனைகளைத் தீர்த்தல்

**மத்திய மாநில உறவுக்குழு**

* 1996ல் அமைக்கப்பட்டது (Art 263)
* மத்திய-மாநில உறவுகளை சீராக்க உதவும் குழு

- - X - -

## பிற தகவல்கள்

27.12.1911 தேசிய கீதம் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் முதன்முதலாக பாடப்பட்டது.

24.01.1950 தேசியகீதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

26.01.1950 சத்தயமேவ ஜெயதேவ் (வாய்மையே வெல்லும்) என்ற வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

22.07.1947 தேசியக்கொடி முடிவு செய்யப்பட்டது.

22.03.1957 தேசிய நாட்காட்டி முடிவு செய்யப்பட்டது.

1968 லோக்பால் மசோதா முதன் முதலில் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

1970 ஒரிசா முதல் லோக் சட்டத்தை இயற்றியது.

1971 மகாராஷ்டிரா முதல் லோக் ஆயுத்தாவை நிறுவியது.

1970 நீதிபதி P.N.பகவதி, V.K. கிருஷ்ணய்யர் அவர்களால் பொதுநலவழக்கு (PIL) முறை தொடங்கப்பட்டது.

1984 குடும்பநீதிமன்றம் அமைக்கப்பட்டது.

1987 லோக் அதாலத் தொடங்கப்பட்டது.

1985 நிர்வாகத் தீர்ப்பாயம் சட்டம் இயற்றப்பட்டது.

1995 இலவச சட்ட உதவி மையங்கள் தொடக்கம்.

2001 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது.

2004 மகளிர் நீதிமன்றம் தொடங்கப்பட்டது.

2007 நடமாடும் நீதிமன்றம் தொடங்கப்பட்டது.

2004 உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தொடங்கப்பட்டது.

2009 அகமதாபாத் நகரில் முதல் மின்னனு நீதிமன்றம் தொடங்கப்பட்டது.

1990 தேசிய பட்டியல்/ பழங்குடியினர் ஆணையம் உருவாக்கப்பட்டது.

1992 தேசிய பெண்கள் ஆணையம் உருவாக்கப்பட்டது.

1992 ஊழல் ஒழிப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

1993 பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் உருவாக்கப்பட்டது.

1993 தேசிய சிறுபாண்மையினர் ஆணையம் உருவாக்கப்பட்டது.

1993 தேசிய மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

2005 வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு U-Visa Card அறிமுகப்படுத்தப்பட்டது. இவர்களுக்கு இந்தியா வர விசா தேவையில்லை.

2008 பிரவேசி பாரதிய திவாஸ் திட்டம் சிங்கப்பூரில் அமல்படுத்தப்பட்டது.

2009 கிராம நீதிமன்றங்கள் செயல்படத் தொடங்கின.

### *தகவல் அறியும் உரிமைச் சட்டம்*

- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (Right to Information Act, சட்டம் எண் 22/2005) இந்திய நாடாளுமன்றத்தால் அரசிடம் அல்லது அரசு உதவிபெறும் நிறுவனங்களிடமிருந்து மக்கள் தகவல்களை உரிமையுடன் அறிந்து கொள்வதற்கு எதுவாக உருவாக்கப்பட்டது.
- கடந்த அறுபதாண்டு கால மக்களாட்சியில் அரசாங்கத் தகவல்களை பொது மக்கள் பெறுவதற்கு அரசு ரகசிய சட்டம் 1923-பெருந்தடையாக இருந்த நிலையயை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மாற்றி அமைத்தது.
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை முதலில் அறிமுகப்படுத்திய நாடு சுவீடன் , 1766-ல் இச்சட்டம் அமலுக்கு வந்தது.
- இந்திய மாநிலங்களில் முதன் முதலில் இச்சட்டத்தை தமிழ்நாடு தான் நிறைவேற்றியது 1977மே 4 அன்று குடியரசு தலைவர் தமிழக அரசு நிறைவேற்றிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்கினார்.





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



- இச்சட்டத்திலிருந்த 19 விதி விலக்குகளும் 12 தெளிவற்ற பகுதிகளும் இச்சட்டத்தை பயனற்றதாக ஆக்கிவிட்டதாக குறிப்பிடுகிறார் பத்திரிக்கையாளர் பரக்கத் அலி.
- தேசிய ஜனநாயக கூட்டணியால் 2002ல் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் சுதந்திரச் சட்டமும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. எனவே முழுப்பலன் தரும் வகையில் தகவல் அறியும் சுதந்திரச் சட்டத்தை மாற்றியமைக்க பரிந்துரைகள் வேண்டி அச்சட்டம் தேசிய ஆலோசனைக் கவுன்சிலுக்கு அனுப்பப்பட்டது.
- பொது மக்களுக்கு பயன் தரும் வகையில் அதிக தகவல் அளித்தல், மேல் முறையீடு வசதி, தகவல் தராதவர்களுக்கு அபராதம் விதித்தல், தகவல் தருவதற்காக அரசின் பணிகள் பாதிக்காத அளவுக்கு பொதுத் தகவல் அதிகாரியை நியமித்தல் உள்ளிட்ட 35 பரிந்துரைகளை தேசிய ஆலோசனை கவுன்சில் வழங்கியது. பின்னர் பொதுமக்கள் குறைதீர்ப்பு சட்டம் மற்றும் நீதித் துறை நிலைக் குழுவின் பரிசீலனைக்குச் சென்று அக்குழு பரிந்துரைத்த 148 திருத்தங்களை, உயர் நிலைக் குழு அறியும் உரிமைச் சட்டம் 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

### ***நோக்கம்***

அரசு அதிகாரிகள் தங்களது செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டிருப்பதும், ஊழலைக் கட்டுப்படுத்தி தவிர்ப்பதும், அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகள், மக்களுக்குத் தேவையான தகவல்களைத் தரக் கடமைப்பட்டுள்ளதை உறுதிசெய்வதும் தகவல் பெறும் சட்டத்தின் நோக்கங்களாகும்.

### ***தகவல் கொடுக்கும் கடமை***

- அரசாங்கம் சார்ந்த அல்லது அரசு உதவி பெறும் நிறுவனங்கள், துறைகள், அலுவலகங்கள் அனைத்தும் தங்களைப் பற்றிய தகவல்களைத் தரமாகவே முன்வந்து மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.
- குறிப்பாகத் தகவல்களைப் பெறும் நோக்கோடு மக்கள் தங்களிடம் கேட்கும்பொழுது தகவல்களை அளிக்கவேண்டியது அரசு, நிறுவன அலுவலர்களின் கடமை என இச்சட்டம் கூறுகின்றது.

### ***தகவல்***

தகவல் என்றால் பிரிவு 2(1) இன் படி பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்னஞ்சல்கள், கருத்துரைகள், அறிவுரைகள். செய்தி வெளியீடுகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், நாள்விவரக் குறிப்பேடுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள்கள், மாதிரிகள், மாதிரிப் படிவங்கள், மின்னியக்க வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளத் தகவல்கள் மற்றும் நடைமுறையில் உள்ள வேறு சட்டத்தின் கீழ் அரச அலுவலர்கள் (அதிகாரிகள்) மேற்பார்வையிடும் அதிகார வரம்புக்குள் வரும் எவ்விதமான தனியார் குழுமமாக இருந்தாலும் அவைத் தொடர்பான செய்திகளும், தகவல்களும் இதில் அடங்கும்



### ***விண்ணப்பம்***



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

- துகவல் பெற விரும்பும் நபர் ஆங்கிலம் அல்லது இந்தி அல்லது விண்ணப்பம் செய்யப்படும் நிலப்பகுதியின் அலுவல் மொழியில் எழுத்து வடிவிலோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ தகவலின் விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்தைச் சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பின் மத்திய பொதுத் தகவல் அலுவலருக்கோ (அதிகாரிக்கோ) அல்லது மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கோ (அதிகாரிக்கோ) அல்லது மத்திய உதவிப் பொதுத் தகவல் அலுவலருக்கோ (அதிகாரிக்கோ) அல்லது மாநில உதவிப் பொதுத் தகவல் அலுவலருக்கோ (அதிகாரிக்கோ) அனுப்பலாம்.
- தகவல் கோரும் விண்ணப்பதாரர், அத்தகவல் பற்றிய விபரங்களையும் அவரைத் தொடர்பு கொள்வதற்கான முகவரியையும் தவிர வேறு விவரங்கள் எதையும் கொடுக்க வேண்டியதில்லை.

### *காலக்கெடு*

விண்ணப்பம் கிடைத்த 30 நாட்களுக்குள் தகவல் அலுவலர் பதில் அளிக்கவேண்டும். குறிப்பு அவசரத் தகவல்கள் என்றால் 48 மணி நேரத்துக்குள் சம்பந்தப்பட்டவர் பதிலளிக்கவேண்டும்.

### *விதிவிலக்கு அளிக்கப்பட்ட தகவல்கள்*

இந்திய குடிமக்கள் எவருக்கும் பிரிவு 8(1) இன் கீழ் பின்வரும் தகவல்களைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

- இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு நாட்டின் பாதுகாப்பு போர் யுக்திகள், நாட்டின் அறிவியல் மற்றும் பொருளாதார நலன், வெளி நாடுகளின் உறவு இவற்றைப் பாதிக்கும் குற்றம் புரியத் தூண்டுதலாக அமையும் தகவல்கள்.
- நீதிமன்றம், தீர்ப்பாயம், இவை வெளிப்படையாகத் தடை செய்துள்ள தகவல்கள் அல்லது நீதிமன்ற அவமதிப்பை உண்டாக்கும் தகவல்கள்.
- நாடாளுமன்றம் மற்றும் மாநில சிறப்புரிமைகளை மீறும் வகையிலான தகவல்கள்.
- வாணிக நம்பகத் தன்மை, வியாபார இரகசியங்கள், அறிவு சார் சொத்துடைமை இவை வெளிப்படுத்தப்பட்டால் அது மூன்றாம் தரப்பினரின் சந்தைப் போட்டிக்குக் குந்தகம் விளைவிக்கும் தகவல்கள் . இத்தகவல்கள் பெரும்பான்மை மக்களுக்கு இன்றியமையாதது என்று தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவு அடைந்தாலன்றி அத்தகவல்களை வெளியிடக் கூடாது.
- ஒருவருடைய பொறுப்புரிமை தொடர்பு உறவால் கிடைத்த தகவலை, பெரும்பான்மை மக்களின் நலனுக்கு இன்றியமையாதது, என, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவு அடைந்தாலன்றி அத்தகவலை வெளியிடக்கூடாது.
- வெளிநாட்டு அரசுகளிடமிருந்து இரகசியமாகப் பெற்ற தகவல்கள்.
- ஒரு நபரின் வாழ்வு அல்லது உடல் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுத்துவதை, தகவலின் மூலத்தை அடையாளப்படுத்துவதை அல்லது சட்டம் நடைமுறைப்படுத்துவதை அல்லது பாதுகாப்பு





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

நோக்கங்களுக்காக இரகசியமாகக் கொடுக்கப்பட்ட உதவிக்கு ஆபத்து விளைவிப்பதை ஏற்படுத்தும் தகவல்கள்.

- புலனாய்வை அல்லது குற்றவாளிகளைக் கைது செய்வதை அல்லது அவர்கள் மீது குற்ற வழக்கு தொடர்வதைத் தடை செய்யும் தகவல்கள்.
- அமைச்சரவை செயலர்கள் மற்றும் பிற அலுவலர்கள் (அதிகாரிகள்) கலந்தாய்வுகளின் பதிவேடுகள் உள்ளிட்ட அமைச்சரவை ஏடுகள்.
- அமைச்சரவை முடிவுகள் எடுத்த பின்னர். அம்முடிவுகள் அவற்றிற்கான காணங்கள். காரணங்கள், பின்புலங்கள் இவைகள் தடைசெய்யப்பட்ட தகவல்களாக இல்லாதிருந்தால் பொது மக்களுக்குத் தெரிவிக்கலாம்.
- பொது செயல்பாட்டிற்கு, பொது நலனிற்கு தொடர்பில்லாத தனி நபரின் அந்தரங்கத்தில், நியாயமற்ற முறையில் தலையீடு செய்யும் தனிநபரோடுத் தொடர்புடையத் தகவலைத் தெரிவித்தல் கூடாது. நாடாளுமன்றத்திற்கோ, மாநில சட்டப் பேரவைக்கோ மறுக்கப்படாத ஒரு தகவல் தனிநபருக்கும் மறுக்கப்படக் கூடாது.

***அபராதம்***

இச்சட்டத்தின் படி தவறு செய்யும் தகவல் அலுவலர்கள் (அதிகாரி) மீது நடவடிக்கை எடுத்து அபராதம் வழங்கும் அதிகாரம் என்பது மத்தியத் தகவல் ஆணையம் அல்லது மாநிலத் தகவல் ஆணையத்திடம் உள்ளது. குறித்த நேரத்தில் தகவல் அளிக்காமை, தவறான தகவல்கள் தருதல் அல்லது வேண்டுமென்றே திருத்தப்பட்ட தகவல்களை தருதல் ஆகியவற்றிற்காக துறை சார்ந்த நடவடிக்கைகள் எடுக்க நடவடிக்கை எடுக்கலாம். மேலும் தலா.250 ரூபாய் வீதம் 25 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் தகவல் அலுவலரிடமிருந்து அபராதம் வசூலிக்கவும் இச்சட்டம் வழிகோலுகின்றது.

***பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்***

இந்தியாவில் பெண்கள் முன்னேற்றம்

- சுதந்திரத்துக்கு முன்னர் இந்தியாவில் பெண்கள் நிலை வருந்தத் தக்க வகையில் இருந்தது. 1947 முதல் பெண்கள் நிலையினை மேம்படுத்த பல சமூகச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

***1954 இந்து திருமணச் சட்டம்***

- கலப்புத் திருமணங்களையும். சமய கலப்புத் திருமணங்களையும் சட்டப்படி செல்லுபடியாக்கியது.
- ஆண்கள் திருமண வயது 21 ஆகவும், பெண்கள் திருமண வயது 18 ஆகவும் சட்ட பூர்வமாக்கப்பட்டது.
- குழந்தைத் திருமணம் தண்டனைக்குரிய குற்றம் என அறிவிக்கப்பட்டது.

***1955-56ம் ஆண்டு இந்து சட்டம்***

- இந்தியாவில் பெண்கள் முன்னேற்ற வரலாற்றில் இச்சட்டம் ஒரு மகாசாசனமாகக் கருதப்படுகிறது.
- திருமணம், மணமுறிவு தத்து எடுத்தல் பற்றிய விவரங்களை இச்சட்டம் விளக்குகிறது.

***1955 இந்து திருமணச் சட்டம்***

- ஒருதார மணம் சட்டப்பூர்வமாக்கப்பட்டது, பலதார மணம் தடை செய்யப்பட்டது.
- ஆண் ,பெண் இருபாலருக்கும் மண முறிவு அல்லது விவாகரத்தில் சம உரிமையினை வழங்குகிறது.

***1956இந்து வாரிசுரிமைச் சட்டம்***

- தாய் தந்தையின் சொத்தில் மகளுக்கம், மகளின் குழந்தைகளுக்கு சொத்தில் சம உரிமை அளித்தது.
- 1956-ம் ஆண்டின் இந்து மற்றும் இளவர் காப்புரிமைச் சட்டம்.
- தாய்க்குக் குழந்தைகள் மீதான இயற்கைக் காப்பாளர் என்ற உரிமையைப் பாதுகாக்கிறது.
- ஆண்களைப் போல பெண்களும் தந்து எடுத்துக் கொள்ள அனுமதித்தது.

***1961 ஆம் ஆண்டு வரதட்சனை ஒழிப்புச் சட்டம்***

வரதட்சணை பொறுதல் தண்டனைக்குரிய குற்றம் என அறிவிக்கப்பட்டது.

***1961 ஆம் ஆண்டு மகபேறு சலுகைச் சட்டம்***

புணியாற்றும் பெண்கள் மகப்பேறு விடுப்பு பெறும் உரிமயை வழங்கியுள்ளது.

***1971 ஆம் ஆண்டு மருத்துவ ரீதியான கருக்கலைப்புச் சட்டம்***

கருவுற்றிருக்கும் பெண்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் கருவைக் கலைக்கும் உரிமையை அளிக்கிறது.

***1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்***

ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் ஊதியம் வழங்க வழி வகுக்கிறது.

***மத்திய, மாநில சமூக நல வாரியங்கள்***

- பெண்கள், குழந்தைகள் மற்றும் எளியோர் நலன்களை மேம்படுத்துகின்றன.
- ஊனமுற்ற பெண்கள், விதவைகள், அனாதைகள் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கின்றன.





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

***1990 ஆம் ஆண்டு தேசிய பெண்கள் ஆணையச் சட்டம்***

- 1992-ல் தேசிய பெண்கள் ஆணையம் நிறுவப்பட்டது.
- பெண் உரிமைகள் மறுப்பு, கொடுமைகள், அநீதிகள் போன்ற புகார்களை இவ்வாணையம் விசாரிக்கிறது.
- பெண்களுக்கு எதிரான கொடுமைகளைக் களைய நடவடிக்கை எடுக்கிறது.

***இராஷ்டிரிய மகிள கோஷ்***

சுய உதவிக் குழுக்களுக்கு இது நிதி உதவி வழங்குகிறது.

***பாலிகா சம்ரிதி யோஜனா***

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தாய்மார்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது.
- ஒவ்வொரு குழந்தைக்கும் அஞ்சலகம் அல்லது வங்கியில் 500 ரூபாய் வைப்புத் தொகையாக செலுத்தப்படுகிறது.
- இத்தொகையை அப்பெண்கள் 18 வயதினை நிறைவு செய்யம். பொழுது கல்வி, திருமண நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

***சுவசக்தி திட்டம்***

சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தால் நிதி உதவி பெறுகின்றன.

***பிற நடவடிக்கைகள்***

- தமிழ்நாட்டில் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்***

- அரசு சாரா நிறுவனங்கள் (NGO) (Non-Governmental Organizations)
- அரசு சாரா நிறுவனங்கள் (Non-Governmental Organizations) (NGO) அமைப்பு, நிதி, நிர்வாகம் என எதற்காகவும் அரசைச் சார்ந்து இருப்பதில்லை. இவை பொதுவாகத் ‘தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்’ எனவும் அழைக்கப்படுகின்றன.
- ‘என்.ஜி.ஓ.க்கள் எனப்படும் இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் ‘சமூக சேவை யை’ மையமாகக்கொண்டு செயல்பட்டு வருபவை.
- இந்தியா போன்ற வயரும் நாடுகளில் என.ஜி.ஓ-க்களின் பணி மகத்தானவை. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாகச் செயல்படுகின்ற இந்த அமைப்புகள், கல்வி சுற்றுச்சூழல் பாதுகாப்பு சமூக





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

விழிப்பு உணர்வு, மகளிர் மேம்பாடு, சிறு தொழில் வளர்ச்சி, பொருளாதார சமத்துவம், பேரிடர் மேலாண்மை, நலவாழ்வு போன்ற பல்வேறு துறைகளில் ஆர்வம் கொண்டு செயல்பட்டுவருகின்றன.

- அரசு சாரா நிறுவனங்கள் பல்வேறு சமூக இயக்கங்களில் அரசுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன. அரசு அறிவிக்கின்ற நலத்திட்டங்கள் மக்களுக்கு முழுமையாகச் சென்றடைவதில் அரசு சாரா நிறுவனங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. 'மனித உரிமைகள்' நுகர்வோர் பாதுகாப்பு தகவலறியும் உரிமைச் சட்டம்' போன்ற மிக முக்கியமான விஷயங்களையும் என்.ஜி.ஓக்கள் கையில் எடுத்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டுவருகின்றன.
- மக்களின் வளர்ச்சிப் பணிகளுக்காக அரசு ஒதுக்குகிற நிதியைப் பெற்று. பல்வேறு நலத்திட்டங்களை அரசு சாரா நிறுவனங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன.
- தனி நபர், உதவி, பொது மக்களின் நிதி உதவி வெளிநாட்டு நிறுவனங்களின் தனி நபர்களின் நிதி உதவி போன்றவற்றை முறையாகப் பெற்று பல்வேறு பணிகளை அரசு சாரா நிறுவனங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன.
- சமூகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாடு, சமூக, சமத்துவத்திற்காகவும் அரிய பணிகளை அரசு சாரா நிறுவனங்கள் செய்து வருகின்றன.
- பிற்படுத்தப்பட்ட மக்களின் பொருளாதார சுதந்திரத்திற்காகவும் அரசு சாரா நிறவனங்கள் பணிபுரிகிறன. இந்த நிறுவனங்கள் இலாப நோக்கின்ற செயல்படக் கூடியவை
- 'NGO' எனப்படும் இந்தப் புதிய பதத்தை ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கிக் கொடுத்துள்ளத.
- அமெரிக்காவில் 1.5 மில்லியன் 'NGO' –க்கள் செயல்பட்டு வருகின்றன. 2009 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 3.3 மில்லியன் 'NGO' க்கள் உளளனவாம். 400 இந்தியர்களுக்கு ஒரு 'NGO' என்றும் கணக்கில் அமைந்துள்ளதைக் காணலாம்
- 1945ம் ஆண்டு முதல் 'NGO' வை ஐக்கிய நாடுகள் உருவாக்கியது. இது நாடுகளுக்கிடையேயான அமைப்பாக விளங்கியது 'NGO'க்களை பல்வேறு வகைகளாக வகைப்படுத்தலாம் தொண்டை மையப்படுத்தும் 'NGO'க்கள். சேவையை மையப்படுத்தும் 'NGO'பங்கேற்புப் பணியாற்றும் 'NGO'க்கள், மேம்பாட்டை வலியுறுத்தும் 'NGO'க்கள். இவை தவிர சமூகம் சார்ந்தவை,நகரம் சார்ந்தவை, தேசியம் சார்ந்தவை சர்வதேசம் சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.
- தேசிய 'NGO'க்களாக செஞ்சிலுவை, YMCA, YWCA போன்ற அமைப்புகளையும், சர்வ தேச 'NGO'க்களாக ரெட்டா பர்னா (Redda Barna) மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்போம்(Save the Childen). OXFAM, CARE, FORD FOUNDATION, ரக்பெல்லா பவுண்டேஷன் (Rockfellah Foundation) போன்ற பல நிறுவனங்கள் உள்ளன. NGO என்பதற்கு இணையான, பல்வேறு மாறுபட்ட பெயர்களில் சேவை செய்யக்கூடிய நிறுவனங்கள் உள்ளன. இவை முறையே,
- மூன்றாம் பிரிவு நிறுவனம் (Third Sector Organization-TSO)
- இலாப நோக்கற்ற நிறுவனம் (Non-profit Organization-NPO)
- தன்னார்வ நிறுவனம் (Voluntary Organization –VO)

- பொதுச் சமூக நிறுவனம் ( Civil Society Organization –GO)
- அடிப்படை நிறுவனம் (Grassroots Organization – GO)
- சமூக இயக்கம் நிறுவனம் ( Social Movement Organization –GO)
- தனியார் தன்னார்வ நிறுவனம் (Private Vountary Organization –PVO)
- சுய உதவி நிறுவனம் (Self-Help Organization –SHO)
- அரசு சாரா நிறுவனங்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மக்களுக்காக சிறந்த முறையில் பணியாற்றுகின்றன. என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளைக் கூடிய உண்மை ஆனால், சில நிறுவனங்கள் தடம் புரண்டு செல்லுகின்ற காட்சிகளையும் காணலாம். சுனாமி போன்ற பேரிடரின் போது, இந்தியா நோக்கி வந்து குவிந்த பணத்தைப் பல நிறுவனங்கள் முறையாகச் செலவு செய்யவில்லை என்றும் குற்றச்சாட்டு இன்றளவும் உள்ளதை நாம் நன்கு அறிவோம். எழுகின்ற குறைகளைக் களைந்து தொண்டுள்ளத்தோடு NGOக்கள் செயல்பட வேண்டும்.

***பொதுமக்கள் குறை களைதல்***

- ***மனு நீதி நாள் முகாம்:*** மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், அமைச்சர்களிடமும் பொது மக்கள் தங்கள் குறைகளை முறையிட இது ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ***நுகர்வோர் நீதி மன்றங்கள்:*** இந்தியாவின் நுகர்வோருக்கு ஏற்படும் குறைகள் மற்றும் பூசல்களை களையவும், நேர்மையற்ற மனசாட்சியற்ற வணிக நோக்கர்களிடமிருந்து நுகர்வோர்களை பாதுகாக்கவும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, (Consumer Protection Act,1986) ன் படி இந்திய தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பாணையம் (National Consumer Disputes Redressal Commission) இந்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டது.
- மக்கள் குறை தீர் மன்றங்கள் (லோக் அதாலத்) சமூகத்தில் உள்ள நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவியை வழங்கி நீதியை நிலைநாட்டவும் அவர்களுக்கு அனைத்து தரப்பினருக்கும் கிடைப்பதுபோல் சமமான நீதி விரைவாக கிடைக்க வேண்டும் என்பதற்காக மக்கள் குறை தீர் மன்றங்களை (லோக் அதாலத்) நடத்துவதற்காகவுமே சட்டப் பணிகள் ஆணையச் சட்டம் 1987 உருவாக்கப்பட்டது.
- நீதிமன்ற வழக்குகள் மட்டுமின்றி, குடிநீர் வாரியம், மின் சாரம், சொத்து வரி, குடும்ப அட்டை என்பன உள்ளிட்ட அரசுத் துறைகளில் நிலுவையில் இருக்கும் பல லட்சம் வழக்குகளுக்கும் விரைவில் தீர்வு காண வேண்டும்.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 முதல் நடைமுறைக்கு வந்த இச்சட்டம் மக்கள் குறை களைவதில் ஆற்றியுள்ள பணி அளப்பரியது.
- மக்கள் சாசனம்-1991 ஆண்டு பிரிட்டிஷ் பிரதமர் ஜான் மேஜர் ஆட்சி காலத்தில் இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கருத்தாக்கம், மக்கள் குறை களைவதில் மற்றுமொரு முக்கிய ஆயுதமாகும். இது பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டது இது தரம்,உகப்பு, தகுதரங்கள், மதிப்பு, பொறுப்பேற்றல், மற்றும் வெளிப்படைத்தன்மை என்னும் ஆறு முக்கிய அம்சங்களைக் கொண்டது.

- இந்தியாவில் 1997 ம் ஆண்டு மே மாதம் புதுடெல்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய மாநில அரசுகள் மக்கள் சாசனங்களை உருவாக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.
- 2006ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மத்திய அரசு 111 மக்கள் சாசனங்களையும் , மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் 668 சாசனங்களையும் உருவாக்கியுள்ளதாக அறியப்படுகிறது.

### *நுகர்வோர் பாதுகாப்பு சபைகள்*

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் : (1986) (Consumer Protection Act.1986)

- இந்தியாவிலுள்ள நுகர்வோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் , இந்தியப் பாராளுமன்றம் 'நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை' (COPRA) டிசம்பர் 24 ஆம் தேதி 1986 ஆம் வருடம் நடைமுறைப்படுத்தியது.
- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 24 அன்று தேசிய நுகர்வோர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- 1988-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் ஆணையத்தின் தலைமை பொறுப்பை அமர்வு அல்லது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஏற்றிருப்பார். மேலும் இந்த ஆணையம் தலைவருடன் ஒன்பது உறுப்பினர்களையும் கொண்டது
- இச்சட்டம் வழங்கியுள்ள முன்னேற்பாடுகள் பொருடுகள் அதே நேரத்தில் சேவைகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது.
- பொருட்கள் என்பவை எவரொருவர் அல்லது கூட்டு சேர்ந்தோ தயாரிப்பது அல்லது உருவாக்குவது மற்றும் அதனை மொத்த வணிகர் மற்றம் சில்லரை வணிகரின் மூலமாக நுகர்வோருக்கு விற்பது.
- சேவைகள் என்பவை போக்குவரத்து, தொலைபேசி, மின்சாரம், கட்டுமானம் வங்கி சார்ந்த (நிதி மனை சார்ந்த பணலேவாதேவி), காப்பீடு மருத்துவ சிகிச்சை இன்னும் பல..,
- சேவைகளாகப் பொதுவாக கூறுமிடத்து வாழ்க்கைத் தொழிலளர்களான (Professsionals) மருத்துவாகள் பொறியாளர்கள், கட்டடக் கலைஞர்கள் வழக்கரைஞர்கள் இன்னும் பல.., இது போன்றவைகளையும் குறிக்கின்றன.
- புகாரை நுகர்வோர் எழுத்துமூலமாக ஆணையத்திற்கு நேரடியாகவோ அல்லது நுகர்வோரின் அதிகாரம் பெற்றவர் எவரும் அளிக்கலாம். அவர் வழக்குரைஞராக இருக்கவேண்டும் என்பதில்லை. வழக்குகளையும் நுகர்வோரே வழக்காடலாம் அல்லது அதிகாரம் பெற்ற எந்தவொரு நபரும் வழக்காடலாம்.
- நுகர்வோருக்கு துணை நிற்பவர் எவரும் இலர் என்பதையுணர்ந்து, புகாரின் நேர்மையைக் கருதி ஆணையமே வழக்கப் பிரதிநிதிகளை நியமிக்கின்றது.
- ஜுலை 1. 1987 முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. 1991 மற்றும் 1993 களில் திருத்தம் செய்யப்பட்டது. நுகர்வோர் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாக அதன் முக்கியத்துவங்கள் அதிகரிக்கப்பட்டு புதிய பரிமாணத்தோடு மார்ச் 15, 2003 ல் நடைமுறைக்கு வந்தது. இதன்படி வடிவமைப்பட்ட புதிய நுகர்வோர் பாதுகாப்பு வதிகள் மார்ச் 5, 2004 முதல் நடைமுறைக்கு வந்தன.





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

- இந்தச் சட்டத்தின் படி நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில்கள் மாவட்ட. மாநில தேசிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது.
- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஒன்றியம்(Central Consumer Protection Council) மத்திய அரசால் தொடங்கப்பட்டது, இதில் நுகர்வோர் துறைக்கான அமைச்சர் (Minister of Conumer Affairs) தலைவராகச் செயல்படுகின்றார்.
- மாநில நுகர்வோர் பாதுகாப்பு ஒன்றியம் மாநில அரசுகளால் தொடங்கப்பட்ட அமைப்பு. நுகர்வோர் நலன் தொடர்பான, மாநில அமைச்சர் இதன் தலைவராக விளங்குவார், மேலும், அரசு அலுவலர்கள், அரசு சாராத உறுப்பினர்கள். அரசின் ஒப்புதலோடு அங்கம் வகிப்பர். உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்து அல்லது அதற்கு உட்பட்டிருக்கும்.
- மாநில நுகர்வோர் பாதுகாப்பு ஒன்றியத்தின் கூட்டம் தேவைக்கேற்ப அடிக்கடி கூட்டப்படலாம் அல்லது ஆண்டிற்கு இரண்டு முறை கூட்டப்பட வேண்டும்
- மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மையங்கள் (District Consumer Diputes Redressa; Forum-DCDRF), மாநில அரசுகளால் நிறுவப்பட்டுள்ளன. இவை நுகர்வோர் நீதிமன்றங்களாகக் (Consumer Court) செயல்படுகின்றனன. முாவட்ட அளவிலான இந்த நீதிமன்றங்கள் ரூபாய் 20 லட்சம் வரையுள்ள இழப்பீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றவை.
- மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம் (State Consumer Disputes Redressal Commission). ஒரு கோடி ரூபாய் வரை மதிப்பிலான இழப்பீட்டு வழக்குகளை தீர்த்து வைக்கும் அதிகாரம் பெற்றது. இது மாநில அளவிலான நுகர்வோர் நீதிமன்றம்.
- தேசிய நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம் (National Consumer Disputes Redressal Commission-NCDRC), மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்டது. இதுவே தேசிய அளவிலான நுகர்வோர் நீதிமன்றம். இது ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான மதிப்பிலான இழப்பீட்டு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும்.
- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஒன்றியத்தின் நோக்கங்கள்.
- நுகர்வோர் உரிமைகளை எடுத்துரைப்பதும் பாதுகாப்பதும் இதன் அடிப்படை நோக்கங்கள்.
- விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் மனிதனின் வாழ்க்கைக்கோ, உடைமைகளுக்கோ கெடுதல் விளைவிப்பதிலிருந்து நுகர்வோருக்குப் பாதுகாப்பு கொடுத்தல்.
- பொருட்களின் தரம், அளவு , தன்மை, தூய்மை, ஆற்றல் ஆகியவற்றைத் தெரிவிப்பதன் மூலம் தவறான வியாபார நடவடிக்கைகளிலிருந்து நுகர்வோர் பாதுகாப்பு பெறலாம்.
- நியாயமான விலையில் பொருட்கள் மற்றும் சேவைகளை பெறும் உரிமையை நுகர்வோருக்கு அளித்தல்.
- நுகர்வோர் அமைப்புகள், நுகர்வோரின் விருப்பங்களைத் கேட்டு, அவற்றில் முறையானவற்றைச் செயல்படுத்துதல்.
- முறையற்ற வணிக நடவடிக்கைகளினால் ஏற்படும் குறைகளைத் தீர்த்துக் கொள்ள விழையும் உரிமைய நுகர்வோருக்கு உறுதி செய்தல்.
- நுகர்வோர் கல்வி (Consume education)பெறும் உரிமை நுகர்வோர்க்கு உண்டு





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

### நுகர்வோர் பாதுகாப்பு -கூடுதல் தகவல்கள்

- ரால்.ஃப் நடார் என்பவர் நுகர்வோர் இயக்கத்தின் தந்தை எனக் கருதப்படுகிறார்.
- 1962-ம் ஆண்டு நுகர்வோர் உரிமை குறித்த நகல் அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டதை நினைவுகூரும் வயையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15ம் நாள் உலக நுகர்வோர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 1962ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் அமெரிக்க அதிபர் ஜான் எ.ஃப் கென்னடி நுகர்வோர் உரிமைகள் குறித்து உரையாற்றினார். அப்போது அவர் நுகர்வோர்களின் உரிமைகளாக தெரிவு செய்யும் உரிமை (Right to Choose). பாதுகாப்பு உரிமை (Right to safety)தகவல் உரிமை(Right to be informed) ஆகிய மூன்று உரிமைகளையும் குறிப்பிட்டார்..
- தற்போது நுகர்வோர் உரிமைகள் என்று 8 உரிமைகள் குறிப்பிடப்படுகின்றன. அவை.
- திருப்தி உரிமை ( Right to Satisfaction)
- பாதுகாப்பு உரிமை(Right to Safety)
- தகவல் உரிமை(Right tobe informed)
- தெரிவு செய்யும் உரிமை(Right to Choose)
- முறையிடும் உரிமை (Right to be Heared)
- குறை தீர்க்கும் உரிமை(Right to Redress)
- நுகர்வோர் கல்வி உரிமை (Right to consumer Education)
- நலவாழ்வு சுற்றுச்சூழல் உரிமை( Right to Healthy Environment)
- மகாத்மா காந்தி வணிகர்களுக்க கூறிய முக்கிய அறிவுரை ஒன்றில் நுகர்வோரின் முக்கியத்துவம் மிகச் சிறப்பாக, பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர் என்பவர் நம்மிடத்தை நாடி வருவோர்களில் மிக முக்கியமானவர் ஆவார். அவர் நம்மைச் சார்ந்திருக்கவில்லை: நாம்தான் அவரைச் சார்ந்திருக்கிறோம். அவர் நம் வியாபாரத்திற்கு வெளிநபர் அல்லர்: வியாபாரத்தின் ஒரு பகுதியே ஆவார். அவருக்குச் சேவை செய்வதன் மூலம் நாம் அவருக்கு எந்த வெகுமதியும் செய்வதில்லை: மாறாக, அவர் நமக்கச் சேவை செய்ய வாய்ப்பளித்ததன் மூலம் அவரே நமக்கு வெகுமதி செய்கிறார்.

### இந்திய பிரதமர்கள் பட்டியல்

**நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இதுவரையில் 13 பேர் முழு நேரப் பிரதம மந்திரிகளாகப் பதவி வகித்துள்ளனர்.**

குல்சாரிலால் நந்தா மட்டும் 2 முறை இடைக்காலப் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். நேருவின் மறைவுக்குப் பிறகு 27.5.1964 முதல் 9.6.1964 வரை 13 நாள்களும், லால் பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப் பிறகு 11.1.1966 முதல் 24.1.1966 வரையில் மீண்டும் ஒரு 13 நாள்களும் இடைக்காலப் பிரதமராக இருந் திருக்கிறார்.

மோடி 15-வது பிரதமர்.

பிரதமர்கள் பதவிக்காலம்

1. ஜவாஹர்லால் நேரு 1947-1952

2. ஜவாஹர்லால் நேரு 1952-1957

3. ஜவாஹர்லால் நேரு 1957-1962

4. ஜவாஹர்லால் நேரு 1962-1964

5. குல்சாரிலால் நந்தா 1964-1964

6. லால்பகதூர் சாஸ்திரி 1964-1966

7. குல்சாரிலால் நந்தா 1966-1966

8. இந்திரா காந்தி 1966-1967

9. இந்திரா காந்தி 1967-1971

10. இந்திரா காந்தி 1971-1977

11. மொரார்ஜி தேசாய் 1977-1979

12. சரண் சிங் 1979-1980

13. இந்திரா காந்தி 1980-1984

14. ராஜீவ் காந்தி 1984-1989

15. வி.பி. சிங் 1989-1990

16. சந்திரசேகர் 1990-1991

17. பி.வி. நரசிம்ம ராவ் 1991-1996

18. அடல் பிஹாரி வாஜ்பாய் 1996-1996

19. எச்.டி தேவகௌடா 1996-1997

20. ஐ.கே. குஜ்ரால் 1997-1998

21. அடல் பிஹாரி வாஜ்பாய் 1998-1999

22. அடல் பிஹாரி வாஜ்பாய் 1999-2004

23. மன்மோகன் சிங் 2004-2009

24. மன்மோகன் சிங் 2009-2014

25. நரேந்திர மோடி 26.5.2014 -

- 
- 

- **இந்திய குடியரசு தலைவர்கள்**

- இந்திய குடியரசு தலைவர்கள் பெயர்களும் அவர்கள் ஆட்சி செய்த காலம் வரிசை முதலியன இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. போட்டி தேர்வுக்கு தயாராகும் அனைவருக்கும் மிகவும் பயன்படும் என நம்புகிறோம்.

| S.No | பெயர் | காலம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1 | திரு. ராஜேந்திர பிரசாத் | 1950-1962 | இலக்கியத்தில் நோபல் பரிசுக்கு பதினைந்து தடவைகள் பரிந்துரைக்கப்பட்டார். 11 முறை அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டார். |
| 2 | திரு. சர்வெப்பள்ளி ராதாகிருஷ்ணன் | 1962-1967 | 1962 ல் இருந்து அவரது பிறந்த நாள் செப் 5, ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. |
| 3 | திரு. சாகிர் ஹுசைன் | 1967-1969 | இவர் இந்தியாவின் முதல் முஸ்லீம் ஜனாதிபதி ஆவார். |
| | திரு. வரஹகிரி வெங்கட்ட கிரி | 1969 | இவர் பொறுப்பு ஜனாதிபதியாக பணியாற்றியவர். |
| | திரு. மொஹம்மத் ஹிதயத்துல்லாஹ் | 1969 | இவர் பொறுப்பு ஜனாதிபதியாக பணியாற்றியவர். |
| 4 | திரு. வரஹகிரி வெங்கட்ட கிரி | 1969-1974 | இந்தியாவின் பொறுப்பு ஜனாதிபதியாகவும், ஜனாதிபதியாகவும் பணியாற்றிய முதல் நபர். |





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| S.No | பெயர் | காலம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 5 | திரு. பக்ருதின் அலி அஹமத் | 1974-1977 | "உள்நாட்டு இடையூறு" என்னும் அவசரகாலத்தின் போது அவர் ஜனாதிபதியாக இருந்தார். |
| | திரு. பசப்ப தனப்ப ஜட்டி | 1977 | இவர் பொறுப்பு ஜனாதிபதியாக பணியாற்றியவர். |
| 6 | திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி | 1977-1982 | 1977 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதி லோக் சபாவின் சபாநாயகராக போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| 7 | திரு. ஜெயில் சிங் | 1982-1987 | மாநிலத்தின் சுதந்திர போராளிகளுக்காக வாழ்நாள் ஓய்வூதிய திட்டத்தை உருவாக்கியுள்ளார். |
| 8 | திரு. ராமஸ்வாமி வெங்கடராமன் | 1987-1992 | வெங்கடராமன் 1967 இல் யூனியன் திட்டமிடல் ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். |
| 9 | திரு. ஷங்கர் தயள் ஷர்மா | 1992-1997 | 1952 இல், சர்மா போபால் மாநிலத்தின் முதலமைச்சராக ஆனார் மற்றும் சிறிய வயதில் முதலமைச்சராக இருந்தவர். 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்பு வரை அவர் அந்த பதவியில் பணியாற்றினார். |
| 10 | திரு. கோச்சேரி ராமன் நாராயணன் | 1997-2002 | இந்திரா காந்தியின் வேண்டுகோளின்படி அரசியலில் நுழைந்த நாராயணன் 1984, 1989 மற்றும் 1991 தேர்தல்களில் காங்கிரசில் உள்ள பாலக்காடு தொகுதியில் ஒட்டப்பாளம் தொகுதியில் பிரதிநிதித்துவப்படுத்தினார். |
| 11 | திரு. அவுல் பக்கிர் ஜெய்னுலப்தீன் அப்துல் கலாம் | 2002-2007 | அவர் இந்தியாவின் ஏவுகணை நாயகன் என்று அழைக்கப்பட்டார். நவம்பர் 21, 1963 அன்று தானே வடிவமைத்த ஏவுகணையை அனுப்பினார். |
| 12 | திருமதி. பிரதிபா பட்டில் | 2007-2012 | இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதி ஆவார். ராஜஸ்தான் முதல் பெண் கவர்னர் ஆவார் |
| 13 | திரு. பிரனாப் முகர்ஜீ | 2012-2017 | 1973 ல் இந்திரா காந்தி அமைச்சரவையில் |

| S.No | பெயர் | காலம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | | தொழில் துறை மேம்பாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1975-77 இன் சர்ச்சைக்குரிய உள்நாட்டு அவசர காலத்தில் இந்திய அமைச்சரவையில் பிரணாப் முகர்ஜி செயல்பட்டார். |
| 14 | திரு. ராம் நாத் கோவிந்த் | 2017- தற்போதுவரை | ஏப்ரல் 1994 ல் உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து ராஜ்ய சபா எம்.பி. ஆனார். மார்ச் 2006 வரை அவர் தொடர்ச்சியாக பன்னிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். தற்போது இந்தியாவின் முதல் குடிமகனாக பொறுப்பு வகிக்கிறார். |

## முக்கிய கமிட்டிகள் -

| வ.எண் | கமிட்டிகள்/கமிஷன்கள் பெயர்கள் | தொடர்புடையது | கூடுதல் தகவல் |
|---|---|---|---|
| 1 | பலேகர் நீதிமன்றம் | பத்திரிக்கையாளர்களின் சம்பள சீர் திருத்தங்கள் | |
| 2 | மல்ஹொத்ரா கமிட்டி | காப்பீடு சீர்திருத்தம் செய்ய உருவாக்கப்பட்ட கமிட்டி | இந்த கமிட்டி 1993ல் ஆர்.என்.மல்ஹொத்ரா(முன்னாள் ரிசர்வ் வங்கியின் கவர்னர்) தலைமையில் உருவாக்கப்பட்ட கமிட்டி |
| 3 | ஜானகி ராம் கமிட்டி | வங்கியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் விசாரணை மேற்கொள்ள உருவாக்கப்பட்டது. | |
| 4 | சக்ரவர்த்தி கமிட்டி | வங்கித்துறை சீர்திருத்தம் | |
| 5 | ரஜீந்தர் சச்சார் கமிட்டி | முஸ்லீம் சமூகத்தின் மேம்பாடு குறித்து ஆராய உருவாக்கப்பட்ட கமிட்டி | இந்திய நாட்டில் உள்ளமுஸ்லீம் சமூகத்தின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை ஆராய 2005ல் |





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | | டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி ரஜீந்தர் சச்சார் தலைமயில் உருவாக்கப்பட்ட கமிட்டி |
| 6 | செல்லையா கமிட்டி | கறுப்புப் பணத்தை ஒழிக்க உருவாக்கப்பட்ட கமிட்டி | |
| 7 | வான்சூ கமிட்டி | வரி விசாரணை | |
| 8 | பானு பிரதாப் சிங் கமிட்டி | விவசாயம் | |
| 9 | கேல்கர் கமிட்டி | பிற்படுத்தப்பட்டோருக்கான கார்கில் பாதுகாப்பு விசாரணை. | இது ஜனவரி 29,1953ல் ஏற்படுத்தப்பட்டது |
| 10 | ரங்கராஜன் கமிட்டி | தனியார் துறை சீர்திருத்தங்கள் / புள்ளியல் துறை/சர்க்கரை ஆலை | |
| 11 | ரேகி கமிட்டி | மறைமுக வரி விதிப்பு கட்டமைப்பு | |
| 12 | அலாக் கமிட்டி | இந்திய குடிமைப்பணி தேர்வுக்காக அமைக்கப்பட்டது. | |
| 13 | யாஷ்பால் கமிட்டி | பள்ளிக் கல்வி முறை | |
| 14 | ஹனுமந்தராவ் கமிட்டி | உரம் | |
| 15 | மஹாஜன் கமிட்டி | சர்க்கரை ஆலைத்தொழில் | |
| 16 | R.V.குப்தா கமிட்டி | விவசாயக்கடன் | |
| 17 | கான் கமிட்டி | நிதி நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 18 | சந்திரத்தா கமிட்டி | பங்குச் சங்தை | |
| 19 | UK.ஷர்மா கமிட்டி | RRBல் NABARD வங்கியின் செயல் | |
| 20 | அஜீத்குமார் கமிட்டி | இராணுவத்திற்கான சம்பளம் | |
| 21 | CB பாவே கமிட்டி | கம்பெனித் தகவல் | |
| 22 | NN வோரா கமிட்டி | அரசியல்வாதிகள் கிரிமினல்களுடனான தொடர்பு | |
| 23 | பிமல் ஜூல்கா கமிட் | ATCOS ன் செயல்பாடு | |





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 24 | தனுக்கா கமிட்டி | பங்குச் சந்தை | |
| 25 | சி.பாபு ராஜீவ் கமிட்டி | கப்பல் துறையில் மாற்றங்கள் | |
| 26 | S.L.கபூர் கமிட்டி | SSI ல் கடன் மற்றும் பண மாற்றம் | |
| 27 | தாவே கமிட்டி | Unorganized sector ல் ஓய்வூதியம் | |
| 28 | மஷேல்கர் கமிட்டி | ஆட்டோமொபைல் எரிபொருள் கொள்கை | |
| 29 | YB ரெட்டி கமிட்டி | வருமான வரியில் மாற்றம் | |
| 30 | பூரிலால் கமிட்டி | மோட்டார் வாகன வரி உயர்வு | |
| 31 | சப்தரிஷி கமிட்டி | உள் நாட்டில் தேயிலைத் தொழில் முன்னேற்றம் | |
| 32 | அபிஜித் சென் கமிட்டி | நீண்ட கால உணவுக் கொள்கை | |
| 33 | கக்கோதர் கமிட்டி | ரெயில் பாதுகாப்பு | |
| 34 | பி.கே.சதுர்வேதி | மின் துறை சீர்திருத்தம் | |
| 35 | சியாமலா கோபினாத் கமிட்டி | நிதி மோசடி | |
| 36 | ராம் பிரதான் கமிட்டி | மும்பைத் தாக்குதல் தொடர்பாக விசாரணை | 2008ம் ஆண்டு மும்பைத் தாக்குதல் நடைபெற்றது.தீவிரவாதிஅஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டான். |
| 37 | டி.பி வாதவா கமிட்டி | பொது விநியோக முறையின் சீர்திருத்தம் பரிந்துரை கொடுக்க உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்டது | |
| 38 | J.J.ராணி கமிட்டி | கம்பெனி சட்டத்தில் மாற்றங்கள் | |
| கமிஷன்கள் | | | |
| 39 | யு.சி.பானர்ஜி கமிஷன் | கோத்ரா படுகொலை பற்றிய விசாரணைக்கான கமிஷன் | |
| 40 | சர்காரியா கமிஷன் | மத்திய அரசு மற்றும் மாநில அரசுக்கும் சுமூக | சர்காரியா கமிஷன் 1983ல் மத்திய அரசால் |





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | உறவு ஏற்படுத்த உருவாக்கப்பட்ட கமிஷன் | ஆரம்பிக்கப்பட்டது.இக்கமிஷனின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி ராஜிந்தர் சிங் சர்காரியா செயல்பட்டார். |
| 41 | ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் | 1.1992ம் ஆண்டு நடைபெற்ற குண்டிவெடிப்பை விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட கமிஷன்2.தெலுங்கான மாநிலம் உருவாக்கம் தொடர்பான கமிஷன்.இது 2010ல் அமைக்கப்பட்டது. | |
| 42 | தக்கர் கமிஷன் | இந்திரா காந்தி படுகொலை சம்பத்திற்காக ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் கமிஷன் | |
| 43 | ஜெயி கமிஷன் | ராஜீவ் காந்தி காந்தி படுகொலைக்கு காரணமான சதி பற்றிய விசாரணை | |
| 44 | வர்மா கமிஷன் | ராஜீவ் காந்தி காந்தி படுகொலைக்குக் காரணமான பாதுகாப்பு குறைபாடுகள் பற்றிய விசாரணை | |
| 45 | புகன் கமிஷன் மற்றும் சகர்யா கமிட்டி | டெகல்கா டேப்ஸ் | |
| 46 | உபேந்திரா கமிஷன் | தங்கம் மனோரமா தேவி என்ற பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அதை விசாரிக்க உருவாக்கப்பட்ட கமிஷன் | தங்கம் மனரோமா தேவி என்ற பெண் 17 அஸ்ஸாம் ரைபில்ஸ் துணை ராணுவ அதிகாரிகளால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அதை விசாரிக்க உருவாக்கப்பட்ட கமிஷன் |
| 47 | கோத்தாரி கமிஷன் | கல்விச் சீர்திருத்தம் | |
| 48 | நீதிபதி நானாவதி கமிஷன் | இந்திராகாந்தி கொலை செய்யபட்டது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட கமிஷன். | |
| 49 | நானாவதி மேத்தா கமிஷன் | குஜராத் மாநிலத்தில் கோத்ரா ரயில் சம்பவம் எரிப்பு பற்றிய விசாரணை | 27 பிப்ரவரி 2002 அன்று இக்கோரச்சம்பவம் நடைபெற்றது |
| 50 | லிபரான் கமிஷன் | பாபர் மசூதி இடிப்பு சம்மந்தமாக விசாரிப்பு | 1992 டிசம்பர் 6ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 51 | கோஷ்லா கமிஷன் | சுபாஷ் சந்திர போஸ் இறப்பின் உண்மையை கண்டறிய நீதிபதி கோஷ்லா தலைமையில் உருவாக்கப்பட்டது. | இக் கமிஷன் 1970ல் அமைக்கப்பட்டது |
| அரசுசார்ந்தகமிஷன்கள் | | | |
| 52 | மத்திய தகவல் ஆணையம் | இது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்(2005) கீழ் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்தில் தகவல்களை பெற மேல் முறையீடு செய்ய அமைக்கப்பட்டது. | 2005ல் முதன் முதலில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது. மத்திய தகவல் ஆணையத்தின் முதல் ஆணையர் வாஜாஹட் ஹபிபுல்லா |
| 53 | மத்திய கண்காணிப்புத்துறை ஆணைக்குழு | டெல்லியில் அமைந்துள்ளது. | நித்தூர் ஸ்ரீநிவாச ராவ் முதன் மத்திய கண்காணிப்புத் துறை ஆணையக்குழுவின் ஆணையர். |
| 54 | தேர்தல் ஆணையம் | இந்த ஆணையம் பாராளுமன்ற,சட்டமன்ற, ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி தேர்தலை நடத்துகிறது. | இது ஜனவரி 25,1950 முதல் செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் முதல் தேர்தல் ஆணையர் சுகுமார் சென் |
| 55 | பணியாளர்கள் தேர்வு ஆணையம் | இந்த ஆணையம் டெல்லியில் அமைந்துள்ளது. | நவம்பர் 4,1975ல் ஏற்படுத்தப்பட்டது. |

64. 99 - வது சட்ட திருத்தம் 2014 - உச்ச நீதிமன்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் குறித்த குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை வழங்க தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க வழிவகை செய்கிறது.

இந்தியாவிலுள்ள முக்கிய கமிஷன்கள் மற்றும் கமிட்டிகள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.இது அனைத்து போட்டி தேர்வுகளுக்கும் முக்கியமானது.

**முக்கிய கமிட்டிகள் பற்றிய விளங்கங்கள்:**

- வர்மா கமிட்டி – வணிக வங்கிகள் மாற்றம்
- ரெட்டி கமிட்டி – வருமான வரியில் மாற்றம்
- கொல்கார் கமிட்டி – வரிவதிப்பு மாற்றங்கள்
- கேல்கர் கமிட்டி – முதலாவது பிற்படுத்தப்பட்ட ஆணையம்
- மண்டல் கமிசன் – இரண்டாவது பிற்படுத்தப்பட்ட ஆணையம்
- G.கெர் ஆணையம் – அலுவலக மொழிகள்





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

- நரசிம்மன் கமிட்டி – வங்கிச் சீர்த்திருத்தம்
- ராஜா செல்லையா கமிட்டி – வரிச் சீர்திருத்தம்
- V.ராஜ மன்னார் கமிட்டி – மத்திய மாநில உறவுகள்
- M.குன்சிங் – மத்திய மாநில உறவுகள்
- தினேஷ் கோஸ்வாமி – தேர்தல் சீர்திருத்தம்
- M.லிண்டோ – மாணவப்பருவ அரசியல்
- M.கிர்பால் கமிட்டி – தேசிய வன ஆணையம்
- மொராய்ஜி தேசாய் – முதல் நிர்வாகச் சீர்திருத்தம்
- வீரப்ப மொய்லி – இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தம்
- பல்வந்த்ராய் மேத்தா – மூன்றடுக்கு பஞ்சாயத்து
- அசோக் மேத்தா – இரண்டடுக்கு பஞ்சாயத்து
- M.D.ராவ் – பஞ்சாயத்து
- M.சிங்வி – பஞ்சாயத்து
- மாதவ் காட்கில் – மேற்குத் தொடர்ச்சி மலை பாரம்பரியம் குறித்து ஆராய
- கஸ்தூரி ரங்கன் – மேற்குத் தொடர்ச்சி மலை பாரம்பரியம் குறித்து ஆராய
- சோலி சொராப்ஜி – காவல்துறை சீர்திருத்தம்
- பசல் அலி – மாநில மறுசீரமைப்பு ஆணையம்
- ராம்நந்தன் பிரசாத் – பாலேடு வகுப்பினர்
- பத்மநாபன் கமிட்டி – வணிக வங்கிகளின் நிலை
- ரகுராம் ராஜன் – நிதி நிறுவனங்களில் சீர்திருத்தம்
- T.நானாவதி – 1984 – சீக்கியக் கலவரம்
- பட்லர் கமிட்டி – இந்திய மாகாணம் குறையாட்சிக்கு உள்ள தொடர்பு
- முடிமன் கமிட்டி – இரட்டை ஆட்சி



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

- அஜித்குமார் கமிட்டி – இராணுவத்திற்கான சம்பளம்
- C. பாபு ராஜீவ் கமிட்டி – கப்பல் துறையில் மாற்றங்கள்
- கான் கமிட்டி – நிதி நிறுவனங்கள் முன்னேற்றம்
- அபிஜித் சென் கமிட்டி – நீண்ட கால உணவுக் கொள்கை
- கோத்தாரி குழு – கல்வி சீர்திருத்தம்
- யஷ்வால் குழு – உயர்கல்வி
- பானு பிரதாப் சிங் – விவசாயம்
- M.N.வோரா – அரசியல் கிரிமினல்கள்
- J.M.லிண்டோ – மாணவப்பருவ அரசியல்
- B.M.கிர்பால் கமிட்டி – தேசிய வன ஆணையம்
- சந்திரத்தா கமிட்டி – பங்கு சந்தை
- UK ஷர்மா கமிட்டி – RRB செயல்பாடு, NABARD செயல்பாடு
- சப்தரிஷி கமிட்டி – உள்நாட்டு தேயிலை தொழில் முன்னேற்றம்
- S.L. கபூர் கமிட்டி – SSI ல் கடன் மற்றும் பண மாற்றம்

